அதை ஏலத்தில் விட்டு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் லாபம் பெறுகிறார்கள். அந்த நிலையை மாற்றி, நகராட்சியிலேயே அதைப் பயன்படுத்தும் வகையில் மாற்றுவதற்கு, அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களில் சங்கங்கள் என்கிற பெயரால் குத்தகை எடுத்து அதன் மூலமாக வருமானத்தைப் பெற்றுக்கொண் டிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் அரசினுடைய பரிசீலனை யில் இருந்து வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, சில தனி நபர்கள் மீனவர்கள் சொசைட்டி என்று பெயர்களில் ரிஜிஸ்தர் பண்ணிக் கொண்டு, இந்த மீன்பாசி குத்தகையை ஏலத்தில் எடுத்து ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்துக்கொண்டு, அரசை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மீண்டும் அவர்களுக்குக் குத்தகையைக் கொடுக்காமல் இருக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, போலி சங்கங்கள் வைத்துக் கொண்டு, இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்ற புகார்கள் ஏற்கெனவே அரசினுடைய கவனத்தில் இருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்படும்.

திண்டுக்கல் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம்.

* வினா எண். 817—திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் புதிய பஸ் ஸ்டாண்டு அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) தற்போது உள்ள பஸ் ஸ்டாண்டை காய்கறி மார்க் கெட்டாக மாற்றும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இந்த வேலையில் முதல் கட்டம் முடியும் நிலையில் உள்ளது.

(ஆ) இல்லை.